**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. STC 347 of 2017 |

Depositions of PW - 2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : ஜெயபிரபா

Father's Name : க/பெ. உன்னி என்கிற உன்னிகிருஷ்ணன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of june 2022.

**முதல்விசாரணை**

கணவர் உன்னிகிருஷ்ணனும் புவனேஷ்வரி என்பவரும் ஆர்டிஸ் என்ற கம்பெனியில் ஒன்றாக வேலை பார்த்தார்கள். கம்பெனியின் உரிமையாளர் மேற்படி நிறுவனத்தினை முடிவுக்கு கொண்டுவரப்போவதாக தெரிவித்துவீட்டார்கள். அதனால் கணவருக்கும் அவருடன் பணியாற்றிய புவனேஷ்வரிக்கும் வேலை போய்விட்டது. அதனால் கணவரும் புவனேஷ்வரியும் ஜான்சன்ஸ் கல்லூரிரயில் இருந்த கேண்டினை பங்குதாரர்களாக இருநது நடத்தலாம் என்று முடிவு செய்தார்கள். அதன்படி என் கணவர் அவருடைய பங்கு தொகையான ரூ.1,00,000/-யினை கொடுக்கலாம்

என்று முடிவு செய்யபட்டது. மேற்படி புவனேஸ்வரிக்கு வங்கி கணக்கு இல்லாத காரணத்தினால் அவருடைய கணவரான ஜெயசந்திரன் என்பவருடைய வங்கி கணக்கில் முதலில் ரூ. 1 லட்சமும் அதன் பிறகு ரூ.50 ஆயிராமும் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது. மேலும் ரொக்கமாக ரூ. 50000/- மற்றும் 40000/- ரூபாய் ஜெயசந்திரனிடம் நேரடியாக கொடுக்கப்பட்டது. மேலும் ரூ.10,000/-க்கான காசோலைளை என் கணவர் ஜெயசந்திரன் யிடம் வழங்கினார் மொத்தமாக இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் கொடுககப்பட்டது. அவ்வாறு கேண்டீனை நடத்தி வரும் சமயத்தில் எதிரி ஜெயசந்திரன் அடிக்கடி கேண்டீனுக்கு வந்தார். எனவே என் கணவர் புவனேஸ்வரியிடம் எதற்காக ஜெயசந்திரன் அடிக்கடி வருகிறார் என்று கேட்டதற்கு புவனேஷ்வரி தன்னுடைய உதவிக்காக அவர் வருவதாகவும், மேலும், ஜெயசந்திரனுக்கு எவ்வித சம்பளமும் கொடுக்க வேண்டாம் என்றும் அவ்வாறு கொடுக்க வேண்டிய பட்சத்தில் தனக்கு லாபத்தில் கிடைக்கும் பங்கில் தான் கொடுத்து கொள்வதாகவும், கூறிவிட்டார். என் கணவர் மற்றும் புவனேஷ்வரி ஆகியோர் பழைய நிறுவனத்தில் முறையே மார்கெட்டிங் மற்றும் அக்கவுண்ட் பார்த்ததால் இருவரும் கேண்டீனிலும் மேற்படி துறையையே நிர்வகிக்கலாம் என்று முடிவு செய்தனர். மேலும் கல்லூரியை தவிர்த்து வெளி இடங்களுக்கும் உணவு பொருட்களை விற்பதற்கு அனுமதி கோரி கல்லூரியில் முதல்வரை அனுகினார்கள். அதற்கு முதல்வர் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார். அந்த சமயத்தில் எதிரி ஜெயசந்திரன் வெளியில் உணவு வழக்ஙகுவதற்கு ஒரு நிறுவனத்திடம் இருந்து எங்களுடைய கேண்டீன் பெயரில் இருந்த ஹங்கஸ் கட்டின் உடைய லெட்டர் பேடில் தன்னை மேனேஜிங் டைரக்டர் என்று போட்டு கொட்டேசன் வாங்கி வந்தார். அது குறித்து என் கணவர் கேட்டதற்கு அவர்கள் முறையாக பதில் அளிக்க வில்லை. மேலும் என் கணவர் முதல்வர் அனுமதி மறுத்துள்ள நிலையில் இவ்வாறு வெளியில் இருந்து ஆர்டர் எடுத்து வருவது தங்களுடைய தொழிலை பாதிக்கும் என்று கூறினார். மேலும் புவனேஷ்வரி தன் பங்கிற்காக எவ்வித முதலீடும் செய்யவில்லை. ஆனால் பழைய நிறுவனத்தில் வைத்திருநத பாத்திரங்களை மட்டும எடுதது வந்து அதற்கு 1 லட்சம் ரூபாய் வரும் என்று கணக்கு காண்பித்துவிட்டார். அது குறித்து அவர்கள் இருவரையும் கேட்டதற்கு கேண்டீனில் மட்டும தான் பங்குதாரர்கள் என்றும் கேண்டீனை விட்டு வெளியில் அவர்கள் செய்யும் வேலை குறித்து கேட்க கூடாது என்று கூறி விட்டார்கள். அதற்கு என் கணவர் மேற்படி ஹங்கஸ் கட் கேண்டீன் இருவருக்கும் உரிமையானது என்றும் அப்பெயரினை பயன்படுத்தி வெளியில் எவ்வாறு நீங்கள் ஆர்டர் எடுக்கலாம் என்று கேட்டதற்கு கேட்க கூடாது என்று கூறிவிட்டார்கள். மேற்படி பிரச்சனை

குறித்து முதல்வரிடம் புகார் அளித்ததற்கு அவர் உங்களுக்குள் நடக்கும் பிரச்சனையை நீங்களே தீர்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டார். அதன்பிறகு 2 நாட்கள் கழித்து கல்லூரிக்கு என் கணவர் கேண்டீனை பார்த்து வர சென்றபோது கல்லூரியின் காவலாளி என் கணவரை கல்லூரிக்குள் விடாமல் தடுததுவிட்டார். மேலும் கல்லூரியின் தொலைபேசியில் தொடர்வு கொண்டதற்கு அவரும் என் கணவரை உளேளே விட க்கூடாது என்று காவலாளி தெரிவித்துவிட்டார். அந்த சமயத்தில் என் கணவருடன் அவர் நண்பர் டெக்ஸ்டர் என்பவரும் இருந்தார். அப்போது அங்கு வந்த ஜெயசந்திரனுக்கு கணவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அதில் ஜெயசந்திரம் கண்வரை அடித்து விட்டடார். அதனால் அங்கிருநது டெக்ஸடர் மற்றும் ரபி மற்றும் அவருஜடய மனைவி சோபி ஆகியோர் கணவரை ஆட்டோவில் ஏற்றி சென்று மருத்துவமனைக்கு அழைதது சென்று முதுலுதவி சிகிச்கை அளித்த பின்னர் வீட்டிற்கு வந்து விட்டு விட்டார்கள். வீட்டிற்கு வந்த கணவர் நடந்தவற்றை என்னிடம் கூறினார். அதன் பிறகு வழக்கறிஞரை அழைத்து சென்று காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். காவல் நிலையத்தில எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் நீதிமன்றத்தின் மூலம் முதல் தகவல் அறிகை பதிவு செய்ய உத்தரவு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. காவல் ஆய்வாளர் அவர்கள் லடஞ்ச வழககில் சிறை சென்று விட்டார். அதன் பின்னர் தனிநபர் புகாரா இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம்.

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2022.06.28 15:38:52 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**